Registered as a Newspaper

A/L Day Class
(விஞ்ஞானம்)
புதிய 2ஆம் பிரிவு
காலை 8-15
Bond INSTITUTION JAFFNA

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1/-

A/L சனி-ஞாயிறு
வகுப்புகள்
8-30 PHYSICS
மின்னியல்
Mr. நந்தகுமார் B.Sc.
12-30 ZOOLOGY
முளையவியல்
[Mr. ஈசன் B.Sc.
Bond INSTITUTION JAFFNA.

ஏடு: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 7 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 20 (23-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-314

## புதுக்குடியிருப்பில் நேற்றுக் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 23

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுக்காலை குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இதன் காரணமாக ஒருவர் கொல்லப்பட்டார்.

பலர் காயமடைந்தனர்.

வெள்ளியன்று சீபிளேன் ஒன்று புதுக்குடியிருப்பு பகுதியை சுற்றி வட்டமிட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் பின்னர், நேற்றுக் காலை திடீரென வந்த குண்டு வீச்சு விமானம் இப் பகுதியில் தாக்குதல் மேற்கொண்டதாக தெரியவருகிறது.

குண்டு வீச்சினால் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் பல வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் காயமடைந்த மூன்று பேர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ–10)

## தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை தவிர்க்க இந்தியா வலியுறுத்து

கொழும்பு, நவ. 23

தமிழ்ப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்தியா, இலங்கைக்கு அறிவுறுத்தி இருக்கிறது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை நேற்றுமாலை நேரில் சந்தித்தபோது இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஷிற் இதனைத் தெரியப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பு நேற்று மாலை கொழும்பில் இடம் பெற்றது.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்த இந்தச் சந்திப்பின்போது தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியில் கடந்த நான்கு நாட்களாக நடக்கும் இராணுவ நடவடிக்கைகள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டன.

இதேவேளை இஸ்ரவேல் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் குறித்தும் இந்திய அரசின் சார்பில் கவலை தெரிவிக்கப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குரும்பசிட்டி ஊடாக வெளியேறிய ராணுவம் திருப்பி அனுப்பப்பட்டது

பலாலி, நவ 23

நேற்றுக்காலை பலாலியில் இருந்து குரும்பசிட்டி வழியாக வெளியேவர முயன்ற இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளால் விரட்டித் திருப்பப்பட்டனர்.

இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த போராளி சின்னத்துரை சதன் (20 வயது) நெஞ்சில் படுகாயமுற்றார்.

பலாலி விமான நிலையத்தின் தென்பகுதியில் உள்ள கிரேசருக்குத் தெற்கே அமைக்கப்பட்ட இராணுவத்தின் மண்மூட்டை அரண்களுக்கப்பால் பதுங்கியிருந்த இராணுவத்தினர் மண்மூட்டைகளைத் தாண்டி வெளியே வர முயன்றனர்.

ஏற்கனவே காவலில் நின்றிருந்த போராளிகள் 'கிரனேற்' வீசியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் இராணுவத்

(4ஆம் பக்கம் பார்க்க)

★ அழுத்தங்களை நீக்குங்கள்

★ இல்லையேல் தமிழீழம் சென்று போராட அனுமதியுங்கள்

# –பிரபாகரன்–

# சாகும்வரை உண்ணாவிரதம்

## சென்னையில் நேற்று ஆரம்பித்தார்

சென்னை, நவம்பர் 23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமது போராட்டத்தை ஆரம்பித்தார்.

இந்திய செய்தி ஸ்தாபனமான பி. ரி. ஐ. இத்தகவலை நேற்று வெளியிட்டது.

✶ என்மீது போடப்பட்ட பொலீஸ் கண்காணிப்பு உடன் நீக்கப்பட வேண்டும்.

✶ பொலீஸார் எம்மிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களையும், தொலைத்தொடர்பு சாதனங்களையும் உடன் ஒப்படைக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தே தாம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதாக திரு. பிரபாகரன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

தமிழக அரசும், இந்திய அரசும் தம்மீதும் தமது இயக்கம் மீதும் பிரயோகித்து வரும் அழுத்தங்களை நீக்க வேண்டும் என்றும்–

இல்லையேல் தமிழீழம் சென்று போராடுவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இன்றி அனுமதிக்க வேண்டும் என்றும் திரு. பிரபாகரன் கோரியுள்ளார்.

இக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தமது உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

திரு. பிரபாகரன் தமது உண்ணாவிரதம் சம்பந்தமாக விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழீழ மக்களை இனவாரியாக ஒழித்துக்கட்ட சிங்கள இனவாத அரசு முழுமூச்சாக முயன்று வரும் இவ்வேளையில் எமது ஆயுதங்களைப் பறித்தும், எமது தகவல் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றியும், எமது நடமாட்டங்களைக் கண்காணித்தும் எம்மில் பல அழுத்தங்களைப் பிரயோகித்து மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் சிங்கள அரசின் கையை பலப்படுத்துவதோடு தமிழீழ மக்களின் பேரழிவுக்கு வழி



வகுப்பதாக அமையும் என அஞ்சுகின்றோம்.

இன அழிவை எதிர்நோக்கி இருக்கும் எமது மக்கள் பாரத நாட்டை குறிப்பாக தமிழ் நாட்டின் மீது அபார நம்பிக்கை வைத்திருப்பவர்கள். வரலாற்று ரீதியாக, கலாசார ரீதியாக பாரதத்துடன் ஆழமான ஆன்மீகத் தொடர்புகளை வைத்திருக்கும் எமது மக்கள் பாரத நாடு எமது பாதுகாவல

(4ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய அரசு அதிர்ச்சி!

புதுடில்லி, நவ. 23

தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப்போராளிகள் குழுக்களின் தொலைத்தொடர்பு சாதனங்களை தமிழ்நாடு பொலீஸார் பறிமுதல் செய்தது குறித்து இந்திய மத்திய அரசு அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்திருக்கிறது.

தமிழக பொலீஸாரின் இந்த நடவடிக்கை குறித்து மத்திய அரசு அதிர்ச்சியடைந்திருப்பதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு மாநில அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிக

(4ஆம் பக்கம் பார்க்க)

## மச்சந்தி முனி



என்ன தமிழ் நாட்டு அரசு முந்திரிக் கொட்டை மாதிரி அவசரப்பட்டு முன்னுக்கு நிக்குது. அங்கை பொலிசுக்குள்ளை ஆரும் சிலோன் கைக்கூலிஇருப்பானே...!

## சுபநேரம்

23–11–1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.11 முதல் 10. 41 வரை
ராகுகாலம்:
4.41 முதல் 6.11வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



யாழ் நகரில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு இரையான ஆஸ்பத்திரி ஊழியர் கனக இரத்தினசிங்கத்தின் சடலம். (உ)

## கோட்டை ஷெல் வீச்சு: 2வது நாள்

# ஆஸ்பத்திரி ஊழியர் மற்றும் இருவர் நேற்றுப் பலி

—அலுவலகச் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம்—

யாழ்ப்பாணம், நவம்பர் 23

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று சனிக்கிழமை இரண்டாவது நாளாக தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றைய தாக்குதலில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் ஊழியரும், மற்றும் இருவரும் பலியானார்கள்.

இரண்டாவது நாளாக பஸ் நிலையப் பகுதி நேற்று வெறிச்சோடிக் கிடந்தது. வாகனங்கள் வின்ஸர் சந்தியிலும், ஆரியகுளம் சந்தியிலும் தங்கி நின்று புறப்பட்டன.

நேற்றுக் காலை ஏழு மணியளவில், யாழ். கோட்டை முகாமில் இருந்து திடீர் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கோட்டைத் தாக்குதல்களை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளும், ஈரோஸ் இயக்கத்தினரும் பதில் தாக்குதல்களை நடத்தினர்.

எனினும் கோட்டையில் இருந்து நேற்று நாள் முழுவதும் ஷெல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கவின்கலை அரங்கு ரத்து

யாழ்ப்பாணம், நவ. 23

புலிகள் இயக்கத் தலைவர் பிரபா சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதன் காரணமாக இன்று நடைபெற இருந்த கவின்கலை அரங்கு நிகழ்ச்சிகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டதாக நேற்று இரவு அறிவிக்கப்பட்டது.

(முன்னர் வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்) (உ)

## 150 பேர் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, நவ. 23

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் உள்ள ஆயுதப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 150 தமிழர் நேற்று பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மூன்று பஸ்களில் இவர்கள் பலத்த பாதுகாவலுடன் பூஸா கொண்டுசெல்லப்பட்டனர். (உ–எ–21)

★ இன்று ஐந்தாம் நாள்:

## சாகும் வரை உண்ணாவிரதம் 'போர்' தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணாமல் போனது தொடர்பாக மாணவரால் நடத்தப்பட்டுவரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தின் ஐந்தாம் நாள் இன்று.

நான்காம் நாளான நேற்று மாணவிகள் இருவரும் சிறிது சோர்வடைந்து காணப்பட்டனர். இவர்களுடன் மூன்று சக மாணவர்களும் மற்றொருவரும் சாகும் வரை உண்ணாவிரதமுள்ளனர்.

பெருந்தொகையான பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் தினமும் இவர்களை வந்து பார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 5 சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், நவ 28

வியாழனன்று காலை 10–50 மணியளவில் சிலாவத் துறையிலிருந்து முருங்கன் முகாம் நோக்கி வந்த இராணுவத்தினர் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படைத் தோழர்கள் நிலக்கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தியதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர். இப்படி ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் அறிவித்திருக்கிறது. (உ)

## பத்துக்கும் அதிகமான தமிழர் முல்லைத்தீவில் கொடூரக் கொலை

யாழ்ப்பாணம், நவ. 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளை, தண்ணீரூற்று பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை பத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொலை செய்யப்பட்டனர் என அறியவந்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் குடிமனைகளுக்குள் புகுந்த சிப்பாய்களே இந்த அட்டூழியத்தைச் செய்ததாகத் தெரியவருகிறது.

கொலை செய்யப்பட்டவர்களில் பெண்களும் அடங்குகின்றனராம்.

இச் சம்பவம் பற்றி அங்கிருந்து வந்தவர் மூலம் தெரியவருவதாவது:–

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 24 மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தது.

ஊரடங்கு நேரத்தில் ஒதியமலை இராணுவ முகாமில் இருந்தும் முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்தும் வெளியேறிய பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினருக்கு உதவியாக குண்டுவீச்சு

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

யாழ் நகரில் தொடர்ந்து நிகழும் இராணுவத் தாக்குதல்களில் படுகாயமடையும் மக்களின் உயிரைக் காப்பதற்கு இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. (உ–10)

யாழ் --- கொழும்பு --- யாழ்
சேவை
SPS ட்ரான்ஸ்போர்ட் சேர்விஸ்
தனியார் ஸ்தாபனங்கள், அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்களின் பொருட்களையும் மற்றும்
தனியாருடைய வெளிநாட்டு பொருட்களையும் பாதுகாப்பாகவும் மிக துரித கெதியிலும்
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும்
கொண்டு செல்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
S. P. S.
ட்ரான்ஸ்போர்ட் சேர்விஸ்
(S. P. S Transport Service)
112, டாம்வீதி, கொழும்பு – 12
தொலைபேசி: 20487, 26437
யாழ்ப்பாணம்:-
27, விக்ரோறியா றேட், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை கிழங்கு பெறுவதில் விவசாயிகள் தயக்கம்

## விநியோகத்துக்குக் கொண்டுவந்தவை தேக்கம்

பலாலி, நவ. 23

யாழ் குடாநாட்டில் அதிகளவு உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் பகுதிகளாகிய வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் விதைகிழங்கிற்கான பணம் கட்டுவதில் விவசாயிகளிடையே தாமதம் நிலவுகின்றது.

கடந்த காலங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஏற்பட்ட நஷ்டமே இப்பின்னடைவிற்கான காரணமென அறியப்படுகின்றது.

புதுவித நோய்கள் பரவுதல், விளைச்சல்குறைவு போன்ற இலாபம் அற்ற தன்மையால் அச்சங்கொண்ட விவசாயிகள் உள்ளூர் விதை கிழங்கைப் பெறத் தயக்கம் காட்டுகின்றனர்.

வலிகாமம் கிழக்கு (வடபகுதி)ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விவசாயத் திணைக்களத்தினால் 70 மெட்றிக் தொன் உருளைக்கிழங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதுவரையும் இச்சங்கத்தின் மூலம் 30 மெட்றிக்தொன்விதைகிழங்கே எடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு (தென்பகுதி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு (நீர்வேலியில்)125 மெட்றிக் தொன் பெற அனுமதி கிடைத்தும் அங்கு இதுவரை 6 மெட்றிக்தொன் கிழங்கிற்கே விவசாயிகளால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை ஒரு அந்தர் கிழங்கின் ஆகக் கூடிய விலையாக 1100 ரூபாவையே சங்கங்கள் பெற வேண்டுமென கமத்தொழிற்பகுதி அறிவித்துள்ளது.

எனினும் கடந்தகாலங்களிலும் பார்க்க இம்முறை ஒரு அந்தர் விதை கிழங்கின்விலை 200 ரூபாவால் அதிகரித்துள்ளது.

நுவரெலியா விவசாய மக்களுக்கு அரசு வழங்குவதுபோன்று வெளிநாட்டு விதை உருளைக் கிழங்கு வழங்கப்படாதுவிடின் உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபடுவதில்லைஎனக் குடாநாட்டு விவசாயச் சங்கங்கள் சில தீர்மானித்துள்ளதும் விதை உருளைக்கிழங்கைப் பெற விவசாயிகள் பின்நிற்பதற்கான மற்றொரு காரணம் ஆகும்.

(இ-119)

## விசேஷ நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 23

பலாலிஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1982 ஆம் ஆண்டு பயிற்சியை முடித்த பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதவர்களுக்கு விசேட நேர்முகப் பரீட்சை டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

1982 ஜூன் அல்லது அதன் பின் இறுதித்தேர்வுக்குத் தோற்றிக் கட்டுறு பயிற்சியை முடித்துவிட்டு நேர்முக தேர்வுக்குத் தோற்றுதவர்களும், தோற்றிச் சித்தி அடையாதோருமேஇந்த விசேட நேர்முகத் தேர்வுக்கு தோற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

பரீட்சைத்திணைக்களம் நடத்தும் இந்த விசேட நேர்முகத் தேர்வு டிசம்பர் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு கோப்பாயில் உள்ள பலாலி ஆசிரிய கலாசாலையில் நடத்தப்படும் என்று கலாசாலை அதிபர் அறிவித்து இருக்கிறார், (இ-எ)

## கவின்கலை அரங்கு

யாழ்ப்பாணம், நவ 23

தமிழர் கலாசார அவையினரின் கவின்கலை அரங்க வாராந்த நிகழ்ச்சிகள் வழமை போல் இன்றும் யாழ்-வின்ஸரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகளில் முதலில் நடைபெறும் இசை அரங்கில் செல்வன் சுரேஸ்காந்தன் வீணை இசை வழங்குவார். கலாவினோதன் திரு. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) வழங்கும் 'தமிழர் தாகம்' வில்லிசையும் இடம் பெறும். (உ-10)

## செய்திக்கொத்து

### புதிய தபால் நிலையம்

அச்சுவேலி, நவ 23

அச்சுவேலி தபால் நிலையம் புதியகட்டடத்தில் செயற்படுகின்றது.

புதியகட்டடத் திறப்பு விழா அச்சுவேலி தபால் நிலைய அதிபர் தலைமையில் நடைபெற்றது; வைபவரீதியாக புதிய கட்டடத்தில் தபால் நிலையவேலைகள் அரம்பமாகி உள்ளன.

புதிய தபால் நிலையம் அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அண்மையில் பருத்தித்துறை வீதி சந்தியில் உள்ள மிக வசதியான கட்டடத்தில் செயற்படுகின்றது

(இ 11)

### வானொலி லைசென்ஸ்

முள்ளியவளை, நவ 23

31-12-86க்கு இடையில் வானொலி.தொலைக்காட்சிப் பெட்டி, டெக் போன்றவைகளுக்குரிய உத்தரவுப்பத்திரங்களைப் பெறும்படியும் தவறும் பட்சத்தில் வானொலிப் பெட்டிகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் ஈ. பி. ஆர். எல் எவ் முள்ளியவளை, தண்ணீரூற்று ஒட்டுசுட்டான் பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது (இ)

### திறந்துவைப்பு

சாவகச்சேரி, நவ. 23

தனங்கிளப்பு கிராமத்தில் பண்டிதமணி சி க. நூல் நிலையம், பண்டிதமணி சி. க. பாலர்பாடசாலை, பண்டிதமணி சி. க. வீதி ஆகியவை திறந்து வைக்கப் பட்டன.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் வைபவங்கள் நடைபெற்றன.

சிவஞானவாரிதி-ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா, சிவதர்மவள்ளல் திரு.க. சனகராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (இ-31)

### இலவச மூக்குக் கண்ணாடி

வட்டுக்கோட்டை, நவ23

ஒவ்வொன்றும் சுமார் 500 ரூபா பெறுமதியான 80 மூக்குக் கண்ணாடிகளை வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகம் இலவசமாக வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருந்து விண்ணப்பித்த விண்ணப்பகாரர்களைப் பரிசோதனை செய்து அவசியம் தேவையான 80 பேருக்கே இந்த இலவச மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டன.

(இ-161)

## சிலிப்பர் கட்டைகள் மறைகின்றன

யாழ்ப்பாணம், நவ. 23

காங்கேசன் துறைப் பகுதி றயில்வே பாதையில் உள்ள சிலீப்பர் கட்டைகள் இனந்தெரியாதோரால் அகற்றிச் செல்லப்படுகின்றன.

காங்கேசன்துறையில் இருந்து தெல்லிப்பளை வரைக்கும் உள்ள றயில்வேப் பாதைக்கே இக்கதி ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான சிலீப்பர் கட்டைகள் விறகுக்காகவே எடுத்துச் செல்லப்படுகின்றன என்று தெரிகிறது. (இ-10)

## விளையாட்டரங்கு

### யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டம்:

# கொக். இந்து - யூனியன் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் பதினைந்து வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறுகிறது.

சாம்பியன்களைத் தெரிவு செய்வதற்கான இன்றைய மோதலில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை எதிர்த்துக் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதும்.



கணேஷ்
(கொக்குவில் இந்து)

இந்தச்சுற்றுப்போட்டியின் மூன்றுவது இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டமும் இன்று நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியை எதிர்த்து நடேஸ்வராக் கல்லூரி மோதும்.

இறுதியாட்டத்திற்குத் தெரிவான கொக்குவில் இந்துக்கல்லூரிஅணி அரையிறுதியாட்டத்தில் ஒஸ்மானியாக் கல்லூரியை தோற்கடித்தது யூனியன் கல்லூரி அணி நடேஸ்வராக் கல்லூரி அணியைத் தோற்கடித்திருந்தது.

இன்றைய ஆட்ட ஆரம்பத்தில் மோதும் இரண்டு அணிகளும் வட்டாரக் கல்வி அதிகாரி (உடற்கல்வி) திரு. வி. கணேசலிங்கத்துக்கு அறிமுகம் செய்துவைக்கப்படுவர்.

ஆட்டத்தில் வடமாநிலக்கல்விப்பணிப்பாளர் திரு ஆர் சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார். அவர் வெற்றி வீரர்களுக்கான பரிசில்களை வழங்குவார்.

யூனியன் கல்லூரிஅணிக்கு ஆர். இராஜ்குமார் தலைமை வகிப்பார். கொக்குவில் இந்து அணிக்கு தலைவர் பி. கணேஷ்குமார். –

இரு அணிகளிலும் விளையாடும் வீரர்கள் பட்டியல் வருமாறு:-

**யூனியன் அணி**

ஆர். இராஜ் குமார் (தலைவர்), எஸ். வி. குலேந்திரன் (உபதலைவர்), ஆர். கோமலேஸ்வரன், வி. சுரேந்திரன், பி.பாஸ்கரன், ஆர் செந்தில்ராஜ்.ரி மகிராஜன், ஜே.நிஷாந்தன்,பி. ஆதவன்,ஏ டி பிராங்ளின், எம். அகிலன்,பி.காங்கேயன்,எம். சபேசன், எம். உமாசங்கர், ஜே. ஈ. ஜெயச்சந்திரா, எஸ் ஞானராஜ்.

பயிற்சியாளர்:- வி. பாலசிங்கம்.

**கொக்குவில் அணி**

பி.கணேசலிங்கம்(தலைவர்) எஸ். பார்த்திபன் (உபதலைவர்) எம். தயானந்தன், கே. விஸ்வநாதன், பி. கோணேஸ்வரன், எஸ். குணசீலன், என். நவேந்திரன். எஸ். இராகுலன், பி. ஜெயராகவன், பி. வசீதரன், எஸ். ஐங்கரலிங்கம், பி. சஞ்ஜயன்,பி பாலமுரளி ஸி. சுதாகரன், ரி. சிறீகரன், எம். பிரபாகரன்.

பயிற்சியாளர்:- என். துஷியந்தன்.



இராஜ்குமார்
(யூனியன்)

இநதச் சுற்றுப்போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. ஏ. பஞ்சலிங்கம் (அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி), செயலாளர் காப்டன். என். சோமசுந்தரம், உதைபந்தாட்டச் செயலாளர் ஜனாப். கே. எம். எஸ். ஹமீட் ஆகியோர் கவனித்து வருகின்றனர். (உ)

## பாணந்துறை முன்னாள் எம் பி. மீது வழக்கு

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் கூட்டம் ஒன்றில் பேசியதாக பாணந்துறை முன்னாள் எம். பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

பாணந்துறை மேல் நீதி மன்றத்தில் சட்டமா அதிபர் இக்குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப். அமீர் இஸ்மாயில், டிசம்பர் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி டாக்டர் நெவில் பெர்னாண்டோவுக்கு சமமன்ஸ் அனுப்பும்படி பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

பாணந்துறையில் நடந்த அரசியல் கூட்டம் ஒன்றிலேயே டாக்டர் பெர்னாண்டோ அவதூறுகப் பேசினார் என்று குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

(இ எ)


மீண்டும் இலங்கையில்

லோர்ஸ்பேன்* 40 ஈ.சி

குளோர்பைரிபோஸ் 40%




எச்சரிக்கை:- எல்லா பீடைநாசினிகளும் அபாயகர. மானவை கவனமாக கையாளவும்.



விவசாயிகளின் முதல் தேர்வு

பூச்சிநாசினி

மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-
நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,
உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்,

| | |
|---|---|
| 100 மி.லி. | ரூ. 55/- |
| 200 மி.லி. | ரூ. 98/- |
| 500 மி.லி. | ரூ. 215/- |
| 1 லீட்டர் | ரூ. 420/- |

ANGLO-ASIAN AGRO CHEMICALS

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

* அமெரிக்க டௌ கெமிகல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்



INVESTMENT OPPORTUNITY

An established industry manufacturing a fast moving household product using freely available local rawmaterials is looking for additional investment for its future programme. The venture will be specially attractive to persons with marketing ability and contacts. Those interested are kindly requested to ask for appointment by contacting the following address

Advertiser M 63, C/o. dyn ads,
476, Main Street, Chundikuli, Jaffna.
(opposite St,John's College)



தேவை

சிறு கைத்தொழில், வியாபாரம் அல்லது வேறு ஏதாவது முயற்சிகளைச் சிறிய முதலீட்டுடன் செய்வதற்கு பங்குதாரர் தேவை. தொழில் தெரிந்தும் முதல் இல்லாமல் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர எண்: 38, மே/பா. உதயன்,
அஞ்சல் பெட்டி எண்: 23, யாழ்ப்பாணம்.



பாலர் வகுப்பு ஆசிரியர் பயிற்சி

(PRE-SCHOOL TEACHER TRAINING)

உடுவில் மகளிர் கல்லூரி தொடர் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட ஓராண்டுப் பயிற்சிநெறி 1987 ஜனவரியில் ஆரம்பமாகும்.

க.பொ த. (சாதாரண) பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இப்பயிற்சி நெறியிற் சேரலாம். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பல்கலைக்கழக ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள் பகுதி நேர விரிவுரைகளை நடத்துவார்கள்.

மாணவிகளுக்கு விடுதி வசதிகளுண்டு.

பயில விரும்பும் மாணவிகள் 10-12-86க்கு முன்னர் கிழமை நாட்களில் அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

இயக்குநர்.
தொடர் கல்விப் பிரிவு.

உடுவில் மகளிர் கல்லூரி.
உடுவில்.



விற்பனைக்கு

Westpoint Deep Freezer 6.5 CFT விற்பனைக்குள்ளது. விளம்பரதாரர் M64,மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)



MATRIMONIAL

Parents seek bride from respectable Hindu Vellala family for son, 31, residing in Canada Mars in Lagna. Contact with horoscope and all particulars. No Brokers please. Advt, No. 39, C/o Uthayan Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயசங்கற்பம்**

பிறந்தநாள் ஆண்டுக்கு ஒருமுறை வருகின்றது. ஆனால், நல்லபணி ஒன்றைத் தொடங்கும் நாள் ஒவ்வொன்றுமே நமக்குப் பிறந்த நாள்தான்.

— பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா


உதயன்

இல.55. 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

23-11-1986 த.பெ இல.23


## அழிவிலிருந்து காக்க...

இனப்பிரச்சினைத் தீர்வு இந்தா வந்துவிட்டது என்று இருந்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றம். கூட்டறிக்கை வெளியிடும் அளவுக்கு பெங்களூர் பேச்சு முன்னேறி வருவதாக இலங்கை அரசாங்க வட்டாரங்கள் தம்பட்டம் அடித்ததும் உண்டு.

ஆனால் பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாச கடந்த வெள்ளிக்கிழமை பெங்களூர் பேச்சுக் குறித்து வெளியிட்ட விவரம் உண்மை நிலையை எடுத்துக் காட்டிவிட்டது.

தீர்வுக்கான 'கரு'த்தானும் இதுவரை உண்டாகவில்லை என்று அவர் தெரிவித்திருக்கிறார். உண்மையில் இது மலையைக் கெல்லி எலியைத் தானும் பிடிக்காத கதை என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

இனப்பிரச்சினைத் தீர்வுக் கருக்கொள்ள வேண்டுமானால் தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.

தனக்கு இயைந்த, தமிழர்கள் ஏற்கமாட்டார்கள் என்று நிச்சயமாகத் தெரியும் திட்டங்களை அரசாங்கம் முன் வைத்தால் தீர்வு எப்படிக் கருக்கொள்ள முடியும்?

இலங்கை அரசாங்கத்துக்கு அரசியல் தீர்வில் இருக்கும் நாட்டத்தைவிட இராணுவத் தீர்வில் தான் விருப்பம் அதிகம். அரசின் பல செயல்கள் அதனை ஏற்கனவே நிரூபித்திருப்பதை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

பெங்களூர் பேச்சுக் காற்று வீசி, தோல்வியில் முடிந்த ஒரு சில மணி நேரத்தில் இஸ்ரவேலிய ஜனாதிபதி கொழும்பு வந்தது அரசின் போக்கை மேலும் ஊர்ஜிதமாக்குவதாக உள்ளது.

அரசியல் தீர்வு என்று கூறிப் பெங்களூரில் ராஜீவுடன் தேன் ஒழுகப் பேசிவிட்டு வந்த கையோடு ஜனாதிபதி ஜெயவர்த்தன இஸ்ரவேலிய ஜனாதிபதியுடன் பேசினார்.

இஸ்ரவேலிய ஜனாதிபதியுடனும் இனப்பிரச்சினை சம்பந்தமாக திரு ஜே. ஆர். பேசினார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இனப்பிரச்சினையை எந்தக் கோணத்தில் வைத்துத் தீர்க்கலாம் என்பது குறித்து அந்தப்பேச்சு அமைந்திருக்கும் என்பதை சிறீலங்கா அரசின் போக்குத் தெரிந்தவர்கள் நன்கு ஊகிக்க முடியும்.

சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இஸ்ரவேல் ஏற்கனவே எந்த அளவுக்கு உதவி வருகிறது என்பது உலகறிந்த விடயம். இப்போது இருநாட்டு ஜனாதிபதிகளும் நேரில் பேசினால் வேறு எதைப்பற்றிப் பேசுவார்கள்?

அந்தச் சந்திப்புக்கு அடுத்தநாள் வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துவிட்டன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய வடக்கு மாவட்டங்களில் அட்டூழியம் தொடங்கிவிட்டது. இஸ்ரவேல் — இலங்கை ஜனாதிபதிகள் சந்திப்பின் விளைவுகளில் இதுவும் ஒன்றாக இருக்குமோ எனச் சந்தேகம் எழுவதில் தவறு என்ன?

இந்தியாவுடன் அரசியல் பேச்சு; இஸ்ரவேலுடன் இராணுவப் பேச்சு. இந்தநிலை தமிழர்களை அழிக்கும் சூழ்ச்சியே அன்றி வேறல்ல.

ஆகையால் தமிழர்கள் ஒன்றுபடவேண்டிய அவசரமும் அவசியமும் இப்போது அதிகம் ஏற்பட்டிருக்கின்றது. எப்போதையும் விட இப்போது அதுவே பிரதானம்.

தமக்கு இடையே உள்ள சிறு பிணக்குகளைத் தவிர்த்து எல்லாத் தமிழர்களும் ஒன்றுபடவேண்டும். சகலவிதமான பேதங்களையும் களையவேண்டும். கட்சி, இயக்க, பிரதேச வேறுபாடுகளை விட்டொழிக்கவேண்டும்.

எம்மை எதிர்நோக்கும் ஆபத்தை உணர்ந்து எல்லோரும் கைகோர்த்துச் செயற்படவேண்டும். மக்கள் வேறு இயக்கங்கள் வேறு என்றோ, இயக்கங்களுக்கிடையிலேயே பெரிது சிறிதென்றோ, நீதான் செய்யவேண்டும், நான்தான் செய்யவேண்டும் என்றோ முரண்டு பிடிக்காமல் ஒன்றாக ஆபத்தை எதிர்கொள்ள முன்நிற்கவேண்டும். எவரும் எந்நேரமும் செயற்படத் தயாராகவேண்டும். இது எம்மை அழிவில் இருந்து காப்பாற்றுவதற்கு அத்தியாவசியம்; அத்தியாவசியம்.

## பிரசைகள் குழு அலுவலகத்தை முற்றுகையிட்ட பெண்கள்

மட்டக்களப்பு, நவ.23

வவுணதீவு, சாளம்பைகேணி கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 100 குடும்பப் பெண்கள் பிரஜைகள் குழு அலுவலகத்தை முற்றுகையிட்டு தமது கிராமங்களில் தம்மை மீண்டும் குடியமர்த்துமாறு கண்ணீர் மல்கக் கேட்டுக்கொண்டார்.

பிரசைகள் குழு வாராந்த கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் நடந்தது. தமது நிலவரம் தொடர்பாக பெண்கள் விளக்குகையில்;

படையினர் எமது கிராமங்களில் இரு மாதங்களாக தங்கியிருக்கிறார்கள். உடுத்த உடையுடன் வெளியேறிய நாம் அகதி முகாம்களில் தங்கியுள்ளோம்.

வீடுகளில் கைவிடப்பட்ட உடைமைகள் நெல் மூடைகள், கால்நடைகள், தொழில் உபகரணங்கள் பற்றி எவ்வித தகவலும் இல்லை.

அரச நிவாரணம் கிடைத்தால் மட்டும் போதுமா? எமது தொழில், பிள்ளைகள், கல்வி உட்பட சகலவற்றையும் இழந்திருக்கிறோம்' என அவர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஜப்பானில்

# எரிமலை வெடித்தது

## பதினோராயிரம் மக்கள் தீவிலிருந்து இடம் பெயர்வு

டோக்கியோ, நவ.22

ஜப்பானில் டோக்கியோவிற்கு அருகில் எரிமலை வெடிப்பில் பாதிக்கப்பட்ட ஒஷிமா தீவிலிருந்து மக்களை அப்புறப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகின்றது.

மிகாரா எரிமலை வெடித்திருப்பதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை.

சுமார் பதினோராயிரம் மக்கள் கப்பலின் மூலம் அப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப் பட்டனர்

இதுவரையில் எந்தவித உயிர்ச்சேதம் பொருட்சேதம் பற்றிய தகவல்களும் இல்லை.

இந்தஎரிமலை வெடிப்பு பூமி அதிர்வுடன் இருந்தது.

கடந்த 12 ஆண்டுகளாக அமைதியாக இருந்த இந்தஎரிமலை வெடித்துச் சிதறி எரிமலைக் குழம்பையும் புகையையும் வெளிவிட்டது. (ஒ)

## ஆயுத விற்பனையில் மேலும் விவரங்கள்

வாஷிங்டன், நவ.22

ஈரானுக்கான அமெரிக்காவின் ஆயுத உதவி பற்றிய மேலும் பல விவரங்கள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

பிரதிநிதிகள் சபையில் உள்ள ஜனநாயக கட்சியின் தலைவர் ஜிம்ரைட் இதனை வெளியிட்டார்.

ஈரானுக்கு விற்பனை ஆயுதங்களில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவை பீரங்கி தாக்கும் ஏவுகணை எனவும் இதை ஈரானுக்கு எடுத்துச் செல்வதற்காக ஒரு கோடியே 60 லட்சம் டாலர்களை ஈரான் சுவிஸ் வங்கியில் வைப்பிலிட்டுள்ளதாகவும் ஜிம் ரைட் தெரிவித்தார். (ஒ)

**ஆப்கான் அதிபர் பதவி விலகினார்**

காபுல், நவ 22

1979ஆம்ஆண்டிலிருந்து ஆப்கானிஸ்தான் அதிபராகப் பதவி வகித்து வந்த பார்பராகாமல் தமது பதவியிலிருந்து விலகியுள்ளார்

ரஷ்யாவின் நெருக்கடி காரணமாகவே இவர் ராஜினாமா செய்துள்ளார் என நம்பப்படுகின்றது. (ஒ)

**வெளி உலகில்**

## விமான நிறுவன இணைப்புக்கு எதிர்ப்பு

இந்தியா, நவ. 22

ஏயர் இந்தியா நிறுவனத்தையும் இந்தியன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தையும் ஒன்றாக இணைக்கும் திட்டத்திற்கு ஏயர் இந்தியா ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்

அடுத்த ஆண்டு ஜூலை மாதத்தில் இரண்டு விமான சேவை நிறுவனங்களையும் இணைப்பதற்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு எடுத்த முடிவுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

சேவைகளைச் சீர்திருத்துவதற்கும் செலவைக் குறைப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவும் என அமைச்சு அறிவித்தது.

ஆனால் ஏயர் இந்தியா ஊழியர்கள் அங்கம் வகிக்கும் ஆறு தொழிற் சங்கங்கள் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. (ஒ)

## அரசியலைக் குழப்ப சி. ஐ. ஏ. முயற்சி

மணிலா, நவ. 22

பிலிப்பீன்ஸில் அரசியல் ரீதியான குழப்பத்தையும் நெருக்கடியையும் தூண்டி விடுவதற்கு அமெரிக்கா மத்திய புலனாய்வு ஸ்தாபனம் (சி. ஐ. ஏ.) பெரிதும் முயற்சி எடுத்து வருகின்றது.

இவ்வாறு ஜனாதிபதியின் மைத்துனரும் அரசாங்கத்தின் சார்பில் சமரச முயற்சிகளை எடுத்து வருபவருமான அகிட்டோ அக்கினோ தெரிவித்தார்.

கடந்த சில தினங்களில் இடதுசாரி தொழிற் சங்கத் தலைவர் முன்னாள் கன்சவேட்டிவ் அரசியல்வாதி ஆகியோர் கொலை செய்யப்பட்டதற்கும் மணிலாவில் தொடர்ச்சியாக இடம்பெறும் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் பின்னணியில் அமெரிக்கா மத்திய புலனாய்வு ஸ்தாபனம் இருந்துள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ)

## பர்மா ஜனாதிபதி விஜயம்

றங்கூன், நவ. 22

பர்மிய ஜனாதிபதி லீடுவான் யூ நாளை திங்கட்கிழமை பங்களாதேஷிற்கான நான்கு நாள் விஜயத்தை மேற்கொள்வார்.

பொருளாதார ஒத்துழைப்பே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாகும். (ஒ)

## பாட்டா 'டாட்டா'

கேப்டவுன், நவ. 23

பாட்டா பாத அணி நிறுவனம் தென் ஆபிரிக்காவில் உள்ள அதன் தொழிற்சாலையை மூடவுள்ளதாக அறிவித்தது.

கனடாவில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள பாட்டா பாத அணி நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளாக தென் ஆபிரிக்காவில் பெரும் தொழிற்சாலையை நடத்தி வருகின்றது.

இத் தொழிற்சாலையில் 3500 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைகளை எதிர்க்கும் வகையில் அங்கே வேலை செய்வதை தவிர்க்கும் படி கனடா அரசாங்கம் தனது நாட்டு நிறுவனங்களைக் கேட்டிருந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை. (ஒ)

# மனிதனல்ல, இறைவனே நம்மை ஆளட்டும்

**ஞானக்கதிர்**

இன்று ஆட்சியும், அதிகாரங்களும் பல கோணங்களில் விமர்சிக்கப்பட்டும், ஆராயப்பட்டும், பேசப்பட்டும் வருகின்ற கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனாலும் மனிதனுடைய கடந்த காலச் சரித்திரத்தையும் இன்றைய உலகையும் கண்ணோக்குமிடத்து மனிதனது ஆளுகையும் ஆட்சி முறைகளும் சமுதாயத்தை நெறிப்படுத்தி, சீரான முறையில் வாழ்வு கொடுக்க முடியாத நிலையிலேயே இருப்பதை நாம் தெளிவாகக்காணக் கூடியதாக இருக்கிறது.

ஆட்சியின் சீர்கேடுகளும், அதிகார துஷ்பிரயோகங்களும், ஒரு பட்ச நீதியும், அடக்குமுறைகளும் அந்நாள் இருந்து இந்நாள் வரைக்கும் இன்னமும் ஓய்வின்றி எம்மத்தியில் விமர்சிக்கப்பட்டு வருகின்றன.

எனவே மனிதர் மத்தியில் என்றேனும் எங்கேனும் ஒரு சீரான சிறப்பான நிலையான ஆட்சியைக் காணவே முடியாதா என்பது இன்று எம் அநேகர் மத்தியில் எழும்பும் ஒரு ஏக்கப் பெருமூச்சாகும்.

இந்த ஏக்கப் பெருமூச்சுக்கு என்னதான் பதில்? ஆம்; சீரான ஆட்சியும், நிறைவான வாழ்வும் இந்த உலகிலே உண்டு என்பதுதான் இறைமகன் இயேசு உலகிற்குக் கொண்டு வந்த நல்ல செய்தி ஆகும்.

ஆனால் இந்த ஆட்சி எந்த மனிதனாலும், எந்தக்கட்சியினாலும் உருவாக்கப் படப்போகும் ஆட்சியல்ல. எந்த ஒரு நாடும் எந்த ஒரு சமூகமும் இதற்கான சிறப்பிடத்தைப் பிடித்துக் கொள்ளவும் முடியாது.

இந்த ஆட்சி அகந்தையுள்ளவர்களைச் சிதறடிக்கும் ஆட்சி. பலவான்



களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையுள்ளவர்களை உயர்த்திவிடும்

**அருட்திரு கே.பி. கோவிந்தராஜ்**

இது இறைவன் ஒருவராலே காலம், இடம் எனும் வரையறையின்றி மனிதர் வாழ்வின் மையத்திலே உருவாக்கப்படப் போகும் ஆட்சி ஆகும்.

இந்த ஆட்சிதான் இறையாட்சி. (பரலோக இராச்சியம்) என்று வர்ணிக்கப்படுகின்றது. உலகில் உதித்த இறை மைந்தன் இயேசுவின் வாழ்வும், செய்தியும், சிந்தனையும் இந்த இறையாட்சியை நிரூபித்து நிற்கின்றன.

ஆட்சி. பசியுள்ளவர்களை நன்மையினால் நிரப்பும் ஆட்சி. ஆம் சமூகத்திலும், ஆட்சியிலும் பரந்தோடி நிற்கும் சகல ஊழல்களையும் தகர்த்தெறிந்து சகல அதிகாரங்களையும் நிர்மூலமாக்கி புதுவாழ்வைப் பிரகடனப்படுத்தும் ஆட்சிதான் இந்த ஆட்சி.

இனிமேல் மனிதனல்ல, மனித அதிகாரங்கள் அல்ல இறைவனே நம்மை ஆளட்டும் இறையாட்சி எம்மகத்தே சீக்கிரம் வரட்டும்.



**பொய்யாமொழி**

குறள்:

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்.

பொருள்:

இன்னா செய்தவரைத் தண்டித்தல், அவரே நாணும்படியாக அவர்க்கு நல்லுதவி செய்து, அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும்.

# பத்திரிகையாளரின் கௌரவம் நிலைநாட்டும் வழியில் பணி

## பாராட்டு விழாவில் உரை

சுன்னாகம், நவ. 23

துணிச்சலுடனும் நேர்மையுடனும்பிழைக்கின்ற எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் பணத்துக்கு அடிமையாகக் கூடாது. அதேபோல முதலாளிகளும் ஏழை எழுத்தாளர்களை — பத்திரிகையாளர்களை அடிமைகொள்ள முனையக்கூடாது. ஒரு எழுத்தாளனின் — ஒரு பத்திரிகையாளனின் சுயகௌரவத்தை நிலைநிறுத்தும் வகையில் மூன்று தசாப்தங்களாக பணி புரியும் 'சசிபாரதி' சபாரட்ணம் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்.

'சசி பாரதி கதைகள்' நூல் அறிமுக விழாவில் உரையாற்றிய திரு. நாவேந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுன்னாகம் பல. நோ. கூ. ச. கலாசாரமண்டபத்தில் சங்க முதல்வர் திரு. க. குமரவேல் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. நாவேந்தன் மேலும் பேசுகையில் வாழ்வின் பல்துறையைச் சேர்ந்த மக்களின் கைநாடி பிடித்துணர்ந்த கலை, இலக்கியம் படைக்கின்ற திரு. சசிபாரதியின் உதாரணத்தைஏனையோரும் சுவடு பற்றிச் செயலாற்ற வேண்டும்' என்றார்.

கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தமது பாராட்டுரையில் 'வடஈழத்தில் தமிழ்ப் பத்திரிகை வெளியீட்டுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்த ஈழகேசரி வெளியான சுன்னாகத்தில் — ஒரு பத்திரிகையாளனைப் பாராட்டும்விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமானது' என்றார்.

[illegible] திரு. [illegible] வேல் தலைமையுரையில் 'கூட்டுறவு நிறுவனங்களை, இலக்கிய வளர்ச்சியையும் தமது பலநோக்குகளில் ஒரு நோக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்' என்றார்.

வலி — தெற்கு உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட இவ்விழாவில் வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திரு. பூ. சதாசிவரத்தினம், வடமாநில திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் வைத்தியகலாநிதி ஆ. நடராஜா, பொ. சண்முகநாதன், இலங்கைவங்கி உதவி முகாமையாளர் திரு. கே. சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி பி. சிவ[illegible] பாராட்டுரை வழங்கினார்கள்.

யாழ் கலை இலக்கிய நண்பர்கள் சங்கச் செயலாளர் திரு. எஸ். திருச்செல்வமும் பேசினார். (இ-27)

# தீட்சை மக்களை நல்வழிப்படுத்துகிறது

வட்டுக்கோட்டை, நவ. 23

சைவ சமயத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தீட்சை கேட்பது மிகவும் அவசியமாகும். தீட்சை மக்களை நல்வழிப்படுத்துகின்றது, தீயனவற்றை மறக்கச் செய்கின்றது.

யாழ் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற தீட்சை வைக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய சிவநெறிப்புரவலர், தொழில் அதிபர் திரு. க கனகராசா மேற்கண்டவாறு கூறினார்.

சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. கனகராசா தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

திருநீறு, உருத்திராக்கம் ஆகிய இரண்டும் சைவசமயத்தின் சிவசின்னங்கள் ஆகும். இவை இரண்டையும் நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

சைவ சமயப் பிள்ளைகளுக்கு சிறுவயது முதல் சைவ சமயப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். சரியான முறையில் சைவ சமயப் பயிற்சியை பெற்றுக் கொள்வோர் ஏனைய மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவார்கள்.

சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளரான சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி தலைமையுரை நிகழ்த்தும்போது 'இன்றைய சைவ மக்கள் சைவ வாழ்வு வாழத் தயங்குகிறார்கள் சைவ சமயக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் பின் நிற்கிறார்கள்.

நாவலர் பெருமான் காட்டிய வழியின்படி நடக்க சகல மக்களும் முன்வரவேண்டும். அப்போதுதான் எமது சமயம் வளரும்' என்றார். (இ-161)

**சமய சந்நிதிகளில்**

## நாவலர் குருபூசை விழா

யாழ்ப்பாணம், நவ. 23

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் ஏற்பாட்டில் நல்லூர் ஸ்ரீசட்டநாத சுவாமி தேவஸ்தானத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை விழா மிக அமைதியாககொண்டாடப் படும்.

இவ் விழாவில் ''நல்லை நகர் தந்த நாவலர் பிறந்திலரேல்'' என்ற தலைப்பில் சொற்பொழிவும் திருமுறைப் பண்ணிசை ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

## விநாயகர் பெருங்கதை

வேலணை, நவ. 23

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி அருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான விநாயகர் விரத பெருங்கதை உற்சவம் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

விநாயகப் பெருமானின் பெருங்கதைப் படிப்புடன் ஆரம்பமாகி இந்த உற்சவம்இருபத்தியொரு தினங்கள் தொடர்ந்து விஷேட அபிஷேக ஆராதனைகளும் பூசைகளும் நடைபெற்று இருபத்தியோராம் நாளாகிய டிசம்பர் 6 ஆம் திகதி சனிக்கிழமையன்று விநாயக சஷ்டி விரத விஷேட உற்சவத்துடன் முடிவுறும். (உ-167)

# யார் பங்குபற்றினாலும் தீர்வுதான் எமக்கு வேண்டும்

## அமிர்தலிங்கம் கூறிய பதில்

புதுடில்லி, நவ. 22

இனப்பிரச்சினைத்தீர்வுக்கான பேச்சுக்களில் தம்பி பிரபா கலந்து கொண்டால் என்ன, நான் கலந்து கொண்டால் என்ன நாம் வேண்டுவது தீர்வு ஒன்றுதான்.

யார் கலந்து கொள்வது என்பது பற்றி எமக்குள் வேறுபாடு, பிரச்சினை ஏதும் கிடையாது.

— இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம்.

'பெங்களூரில் நடைபெற்ற இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் பங்குபற்ற உங்களை அழைக்கவில்லையே? பிரபாகரனைத் தானே அழைத்துள்ளார்கள்? இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? — இப்படி வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸி ஒன்றின் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்தபோது அமிர் மேற்கண்டவாறு கூறினார். (உ)

# மனையியற் கலையால் பெண்களுக்குச் சிறப்பு

இளவாலை, நவ. 23

கலைகள் மக்கள் வாழ்க்கைக்கு மகத்துவத்தைப் பெற்றுத் தரும். மனையியல் கலைகள் பெண்பாலாருக்கு சிறப்பானபெருமையைக் கொடுக்கும். கலை அறிவு ஆக்கங்களை வெளிக்கொணர்ந்து மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

இளவாலை வர்த்தகக் கல்லூரியின் பொருட்காட்சியை இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலய மண்டபத்தில் திறந்து வைத்த போது பிரதம விருந்தினராகப் பங்கு பற்றிய வலி-தென் மேற்கு — சண்டிலிப்பாய் உ.அ அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

I.C M.A. — Stage I
Law - Mr. Eugene Mariampillai
E. Con - Mr. S Kathirgamanathan
Q.M. - Popular University Lecturer
Accounts - Mr S. P. Sivapathasundaram
Commencement: 6 - 12 - 86
**Cantabia Institute**
(shoot of Oxonia, Colombo.)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# உதயன்

23 - 11 - 1986 ஞாயிற்றுக்கிழமை

I C M A. Stage II
F.A - Mr K. Jeyaratnam
C A. - Mr. A Kailayapillai
Management- Mr. R. N Varendran
I T.M. - Mr. S.P Sivapathasundaram
Commencement: 6-12-86
**Cantabia Institute**
(shoot of Oxonia, Colombo.)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

### படையினரின் ஷெல் தாக்குதலினுல்

# அப்பாவித் தமிழர் பரிதாபச் சாவு

## ராஜீவுக்கு சுவாமியின் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 23

கடந்த 11ஆம் திகதி எனது ஆச்சிரமத்திற்கு அருகில் அப்பாவித் தமிழர் ஆயுதபடையினரின் ஷெல்தாக்குதலில் அந்த இடத்திலேயேஉயிரிழந்த பரிதாபத்தை என் கண்களால் கண்டேன்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத் தாபகர் சுவாமி சித்ருபானந்தா இந்தியப் பிரதமர்ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதம் ஒன்றில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்திருக்கிருர்.

கடிதத்தில் சுவாமி சித்ருபானந்தா மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசியல் காரணங்களுக்காக இந்தக் கடிதத்தை நான் அனுப்பவில்லை.

எனது பகுதியில் சில காலத்துக்கு முன்னர் நடைபெற்ற ஆயுதபடையினரின் அத்துமீறல்கள் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதருக்கு அறிவித்தேன். அவர் சாதகமான பதிலை அனுப்பி இருந்தார்,

இப்போது உங்களுக்கே முறையிட வேண்டிய காலம் வந்துவிட்டது. கடந்த 11ஆம் திகதி அதிகாலை இலங்கை விமானப் படை விமானம் குண்டு வீச்சைத் தொடங்கியது. பருத்தித்துறை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நடைபெற்றது- மாலை வரைஇது தொடர்ந்தது.

ஷெல் தாக்கி எனது ஆச்சிரமத்துக்கு அருகில் அப்பாவித்தமிழர் ஒருவர் உயிரிழந்தார். இதை என் கண்ணுல் கண்டேன். எனது சேவாச் சிரமத்துக்கு முன்னுலும் ஷெல் விழுந்து வெடித்தது. எங்களை தெய்வம்தான் காப்பாற்றியது எனலாம்.

முற்போக்கு நாடு ஒன்றின் தலைவரான நீங்கள் தான் நாம் சுயமரியாதையுடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ உதவ வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் இக்கடிதம் தங்கள் கைக்குக் கிடைக்கும் போது நாம் எல்லோரும் உயிருடன் இருப்போமா என்பதே நிச்சயமற்ற விஷயமாக உள்ளது.

உலகில் வாழும் ஏனையோரை போன்று நாம் தமிழரும் ஓர் அரசாங்கத்தைக் கோருவதற்கு உரிமை உண்டு.

எமக்கு உரியதை நாம் கேட்பது தவருனதா? எமது அயலவரான உங்களால் எப்படி உதவமுடியும் என்பது எமக்கு தெரியவில்லை.

பொதுசன தொடர்பு சாதனங்கள் மூலம் தவருன செய்திகளை எமது அரசாங்கம் பரப்புகின்றது. இது எமக்கு வேதனை தருகின்றது.

இப்படி சுவாமி சித்ருபானந்தா கடிதத்தில் தெரிவித்துள்ளார். (எ)

### குரும்பசிட்டி...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

தினர் மீது தாக்குதல் தொடங்கினர்.

போராளிகள் தாக்குதலை எதிர் கொள்ள முடியாத இராணுவத்தினர் பின்வாங்கினர்.

இராணுவத்தினர் பின்வாங்கியதை அடுத்து கரும்புகை நிறமுடைய ஹெலிக்கொப்டர் ஒன்று சரமாரியாக 50 ஹலிபர்' தாக்குதலை மேற்கொண்டது.

நீலம்-மஞ்சள் நிறத்தைக் கொண்ட மற்றும் ஒரு ஹெலிக்கொப்டர் ஒன்று அவ்விடத்துக்கு விரைந்து சுடத்தொடங்கியது.

நண்பகல் 12.30 மணி வரை மேற் கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதல் அதன் பின் ஓய்ந்தது. (உ-119)

### பிரசைகள்--

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

குழுவின் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து இதற்கு பதிலளிக்கையில் வவுனதீவில் படையினர் நிலைகொண்டிருப்பதுகுறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சருடன் நேரடியாக தொடர்புகொண்டு விளக்கப்பட்டுள்ளது.

'தொடர்ந்து ஆயுதப்படை இணைப்பு அதிகாரியுடன் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது. மேலும் பிரஸ்தாபித்து உரிய நடவடிக்கைஎடுப்போம்' என்ருர். (இ-21)

### மனையியற்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு கூறினுர்.

வர்த்தகக் கல்லூரி இயக்குனர் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி திரு ஆர். எவ். ஜேம்ஸ் தலைமையில் திறப்புவிழா நிகழ்ந்தது.

காப்பாளர் அருள் திரு எம்.ரீ. பற்றிக் அடிகளார் மங்கல கீதத்துடன் கல்லூரிக் கொடி ஏற்றி வைத்தார். (இ-48)

# கண்முன்னே 4 பேரை

## படையினர் சுட்டுக் கொன்றனர்

### முல்லைத்தீவில் உயிர்தப்பிய இளைஞனின் பயங்கரஅனுபவம்

யாழ்ப்பாணம், நவ. 23

எனது வீட்டுக்கு வந்து என்னை வெளியில்அழைத்துச் சென்ற இராணுவத்தினர்என்னுடன் மேலும் ஆறு பேரைச் சேர்த்து எங்கள் அனைவரது கைகளையும் ஒன்ருகச் சேர்த்துக் கட்டினர். பின்நிலத்தில் படுக்கவிட்டுச் சுட்டனர்,

இதில் நான்கு பேர் என் கண் முன்னுலேயே துடிதுடித்து மரணமானுர்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் மயிரிழையில் உயிர் தப்பிய சின்னன் முத்து (16 வயது) என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தினர் சுட்டதில் இவருக்கு கையிலும் இடுப்பிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் அவர் உதயன் செய்தியாளரிடம் மேலும் சொன்னதாவது:-

வெள்ளிக்கிழமைபத்து மணி அளவில் எமது வீட்டுப் பகுதியை முற்றுகையிட்ட நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் என்னைக் கைது செய்து வெளியே அழைத்து வந்தனர்.

இராணுவத்தினருடன் மேலும் பல தமிழ் இளைஞர்கள் அங்கு நின்றிருந்தனர்.

என்னையும் சேர்த்து ஏழுபேர் இருந்திருப்பர். ஒரு வீடடுக்கு முன்பாக எம்மை அழைத்துச் சென்ற இராணுவத்தினர் ஏழு பேரது கைகளையும்பின்பக்கமாகக் கட்டி நிலத்தில் குப்புற படுக்கும்படி பணித்தனர்.

நாமும் நிலத்தில் படுத்துக் கொண்டோம்.

பின்னர் எம்மீது திடீர் என துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாம் கத்தினேம் எனக்கும் கைகளில் பலத்த காயம் ஏற்பட்டது.

இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று அரைமணி நேரம் கழித்து எழுந்து பார்த்தபொழுது நான்கு பேர் இறந்து கிடந்தனர்.

நான்செத்தவன்போல் மீண்டும் படுத்துக்கொண்டேன்.

பின்னர் அவ்வீதியால் வந்த பெண்களின் உதவியுடன் வீட்டுக்குச்சென்று பின்னர் ஆஸ்பத்திரிக்கு வந்தேன்.

—இப்படி அவர்சொன்ஞர். (உ-10)

# பல்கலைக்கழக

## மாணவர்கள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 23

பல்கலைக் கழக மாணவன் விஜிதரனை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நாளை திங்கள் காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து ஆரம்பமாகும் என பல்கலைக் கழக மாணவர் அமைப்புக் குழு அறிவித்திருக்கிறது.

அமைப்புக்குழு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில் சொல்லுங்கள்'' என்ற பல்கலைக் கழக மாணவர்களின் கோரிக்கையை இதுவரை எல்லா இயக்கங்களுமே அலட்சியம் செய்து வருகின்றன.

துணை வேந்தரால் ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ், புலிகள், தமிழ் ஈழ ராணுவம் போன்ற இயக்கங்களுக்கு கையளிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஈ. பி. ஆர். எல். எவ், ஈரோஸ் ஆகிய இரு இயக்கங்கள் மட்டுமே பதிலளித்தாலும் அவர்களும் கூட விஜிதரனை தேடுவது சம்பந்தமாக எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

—இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# ஆஸ்பத்திரி ஊழியர்

## கறுப்புப்பட்டி அணிவர்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள் இன்று கறுப்புப் பட்டி அணிந்து வேலைக்குச் செல்வர்.

நேற்றைய ஷெல் தாக்குதலின்போது கொல்லப்பட்ட ஆஸ்பத்திரி ஊழியரான கனக. இரத்தினசிங்கத்திற்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாகவே இப் போராட்டம் நடத்தப்படும்.

ஆஸ்பத்திரி ஊழியரான இவர் ஐந்தாம் வார்ட்டில் சிற்றூழியராக கடமையாற்றி வந்தவர்.

இணுவிலைச் சேர்ந்த இவர் 3 பிள்ளைகளின் தந்தை.

இதேவேளை ஊழியர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றையும் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சக ஊழியரின் அகால மறைவினுல் நேற்று யாழ் ஆஸ்பத்திரி சோகமே உருவாகக் காணப்பட்டது. (உ-10)

### இராணுவ நட---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது

அண்மையில் பெங்களூரிலும், புதுடில்லியிலும் இனப் பிரச்சினை சம்பந்தமாக நடந்த பேச்சுக்கள் குறித்த இந்தியாவின் மதிப்பீட்டைத் திரு. டிக்ஸித் தெரியப்படுத்தினுர்.

சில விளக்கங்களையும் கோரினுர். அவற்றுக்கான பதில்களை அடுத்த வாரம் அறிவிப்பதாக ஜனுதிபதி உறுதி தெரிவித்தார். (அ-உ)

# அடையாள அட்டையை எடுத்துச் செல்லுங்கள்

## பொதுமக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

மக்கள் வெளியே நடமாடித்திரியும்போது தம்மை அடையாளப் படுத்தும்வகையில் அடையாள அட்டைகளை வைத்திருக்குமாறு அவசர மருத்துவ சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவசர மருத்துவ சேவையினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பெயர்:, விலாசம், தொழில் அடங்கிய குறிப்புகள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

யாழ் நகர் பகுதியில் அனுவசியமாக மக்கள் நடமாடுவதையும் கண்டபடி கூட்டம் கூடுவதையும் தவிர்த்து உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

ஏனெனில் சிறிலங்கா அரசு படையினரின் முழு நோக்கமும் எமது பிரதேசத்தையும் எம் மக்களையும் இல்லாது ஒழிப்பதே.

ஆகவே உங்களுக்காக எமது அவசர மருத்துவ சேவை 24 மணி நேர சேவையாக செய்கிருேம்.

எமது அம்புலன்ஸ் துரித சிகிச்சை வண்டி மூலம் அவசர மருத்துவ சேவை நடத்துகின்றது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

### மத்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் உடன் தொடர்பு கொள்ள மத்திய அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்,

''இப்படியான ஒருசூழ்நிலையில் எந்த மட்டத்தில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது?'' என மத்திய அரசு மாநில அரசிடம் [illegible] கும் [illegible] தாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ 23

ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் இருவர் இராணுவத் 'துப்பாக்கிப் பிரயோகத்தில் வீர மரணமடைந்தனர்.

ஒலுமடு என்ற இடத்தில் வெள்ளியன்று இச் சம்பவம் நடந்தது.

மறைந்திருந்த இராணுவம் தாக்கியதில் இவர்கள் இருவரும் வீர மரணம் அடைந்தனர்.

சிவா (பாலன்-நெடுங்கேணி), இரண்டாவது லெப்டினன்ட் கணேஷ் (டொமினிக் சாந்தன் கனகபுரம்) ஆகியோரே வீரமரணமடைந்த புலிகள் இயக்கப் போராளிகள் ஆவர். (உ)

### பத்துக்கும்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற் கொண்டன.

இத் தாக்குதல் காரணமாக பல வீடுகள் முற்ருகச் சேதமடைந்துள்ளன.

அரிசி மில் ஒன்றும் எரிந்து நாசமானது.

தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் வீடுகளுக்குள் இருந்த பல இளைஞர்களை வெளியே அழைத்து வந்து கைகளைக் கட்டி, நிலத்தில் படுக்கவைத்து சுட்டுக் கொன்றதாகவும் கூறப்படுகிறது.

வேறு ஓர் இடத்தில் ஆறு இளைஞர்களை இராணுவத்தினர் ஒன்ருக சுட்டும் வெட்டியும் கொலை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுள் 35 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் சிறுவர்களும், இளைஞர்களும் பெண்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல்களையும் தேடுதல்களையும் அடுத்து பல பொதுமக்கள் முல்லைத்தீவு அகதிமுகாம்களுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவுத் தாக்குதலில் காயமடைந்த ஆறு பேர் (பெண் உட்பட) யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-10)

# கோட்டைக்கு அருகே பாரிய வீதித் தடைகள்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்நகரின்கோட்டை முகாமை அண்மித்துள்ள பல வீதிகளின் குறுக்கே பாரிய தடைகள்போடப் பட்டுள்ளன.

இராணுவத் தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாகவும் இராணுவம் எந்த நேரமும் வெளியேறலாம் எனக் கருதியுமே இந்த வீதி மறிப்புகள் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரிய இரும்புக் கேடர்கள், மண் பரல்கள், மண் மூடைகள் என்பன வீதி மறிப்புக்கு பாவிக்கப்பட்டிருக்கின்றன. (உ-10)

### காயமுற்ருேர்

யாழ்ப்பாணம், நவ. 23

நேற்றைய ஷெல் தாக்குதலில் காயமடைந்தோர் விவரம் வருமாறு.

எம். சி. நடராசா (40 வயது)மட்டுவில், பொன்னம்பலம் இராஜசிங்கம் 67 வயது) காரைநகர், எஸ். தங்கராசா (28 வயது) கொழும்புத்துறை, மோகன் (20 வயது) கொக்குவில், ஏ. கதிரேசன் (18 வயது) கொக்குவில், எம்.கார்த்திகேசு (40 வயது)

# எத்தாக்குதலிலிருந்தும் எம்மக்களைக் காப்போம்

## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம் நவ. 23

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா அரசின் கூலிப் படைகளின் பெரும் தாக்குதலை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் முப்படையினரதும் எந்த விதமான தாக்குதல்களில் இருந்தும் எமது மக்களையும் எமது மண்ணையும் இறுதி வரை போராடிக் காப்போம்.

--இப்படி உறுதி கூறியிருக்கிருர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

இது தொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

விடுதலைப் போராட்டம் முன்னெடுத்து வருகின்ற இவ்வேளையில் 350க்கும் அதிகமான எமது அங்கத்தவர்கள் இப்போராட்டத்தில் தம் இன்னுயிர்களை எமது மண்ணின் விடிவிற்காக தியாகம் செய்துள்ளனர்.

அவ்வாறு எமது இளம் வேங்கைகள் விலைமதிக்க முடியாத தமது உயிர்களை களத்தில் பலி கொடுத்துக்கொண்டிருக்கையில் இப்போராட்டத்தை திசைதிருப்புவதற்காகவும் எம்மை எமது மக்களிடம் இருந்து பிரிப்பதற்காகவும் சில தீய சக்திகள் எம்மைப்பற்றி பலதரப்பட்ட வதந்திகளையும், அவதூறுகளையும் பரப்பி வருகின்றன.

இப்புனிதமான விடுதலைப் போராட்டத்தின் போது யார் என்ன அவதூறுகளையும், பொய்ப் பிரசாரங்களையும் எம்மைப்பற்றி மேற்கொண்டாலும் அவற்றை நம்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்ருேம்.

நாம் எடுத்த முடிவில் இருந்து கொஞ்சமேனும் மாறியது கிடையாது.

எம்முடைய கடந்த கால வரலாறு இதற்குச் சான்று பகரும்.

எம்மைப்பற்றி பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள தீயசக்திகளின் கடந்தகால போராட்ட வாழ்க்கை முறையை எடுத்துப் பார்ப்பீர்களே யானுல் அவர்கள் யார் என்று உங்களுக்குப் புரியும். (உ)

### 3 வர்த்தகர்களும் விடுவிக்கப்படவில்லை

மட்டக்களப்பு, நவ. 23

மட்டக்களப்பு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட மூன்று வர்த்தகர்களும் நேற்று மாலைவரை விடுவிக்கப் படவில்லை.

கடத்தப்பட்ட வர்த்தகர்கள், அவர்களில் ஒருவரான கே. கே. சண்முகத்தின் பேஜோ காரில் தான் கொண்டு போகப் பட்டனர்.

அந்தக் கார் நேற்று ஒள்ளிக்குளம் என்னும் இடத்தில் கைவிடப் பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது. (உ-எ-21)

# இன்று நாவலர் விழா

யாழ்ப்பாணம், நவ. 23

நாவலர் விழா இன்று ஆரம்பமாகின்றது. காலையும் மாலையும் நிகழ்ச்சிகள் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

**காலை நிகழ்ச்சிகள்**

தலைவர்: பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் (யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர்)

8-30: நல்லூர் நாவலர் மண்டபத்தில் திருமுறை ஓதல், சான்ருேரை வரவேற்றல்.

8-45: நல்லூர் ஆலயத்தில் தரிசனம்.

9-30: நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சிலைக்கு மாலை சூட்டி அஞ்சலி செய்தல்.

10-15: வரவேற்புரை திரு. நா.சோமகாந்தன்.

10-25: ஆசியுரை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

10-35: தலைமையுரை

11-00: அறிமுகவுரை பேராசிரியர் அ. சண்முகதாஸ்

11-15: சான்ருேருக்குப் பட்டமளித்துக் கௌரவித்தல்.

12-00: நன்றியுரை திரு. த.கணநாதலிங்கம்.

**மாலை நிகழ்ச்சிகள்**

தலைவர்: மாநகர ஆணையாளர் திரு. சி.வி. கே. சிவஞானம்

3-00: தலைமையுரை.

3-15: சிறப்புரை பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம்.

3-45: உரைக்கோவை

4-45: கவியரங்கம்,

5-45: கலையரங்கம்

7-00 நன்றியுரை — சி. சிவசுப்பிரமணியம். (உ-எ)

### முல்லைத்தீவில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், நவ. 23

முல்லைத்தீவுச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருப்போர் விவரம் வருமாறு:-

சின்னன் முத்து (16 வயது) முல்லைத்தீவு, ஏ. குமார் (16 வயது)முள்ளியவளை, வீரபத்திரன் பெருமாள் (45 வயது), முள்ளியவளை, எஸ்.மாரிமுத்து (24 வயது) தண்ணீரூற்று, கிருஷ்ணசர்மா (25 வயது) முள்ளியவளை, நா. நாதன் (26 வயது) முள்ளியவளை, சண்முகம் (27 வயது) முழங்காவில், சிவசுந்தரம் அகிலாண்டேஸ்வரி, (40 வயது) முள்ளியவளை. (உ-10)

### சாகும்வரை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வையிட்டு அவர்களின் போராட்டத்தை ஊக்குவித்துச் சென்றனர்.

பல மாணவர்கள் இவர்களுடன் தினமும் கட்டம்கட்டமாக ஒரு நாள் அடையாள உண்ணுவிரதம் இருந்து வருகின்ருர்கள். (உ-5)

### ஆஸ்பத்திரி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள் விட்டு விட்டு மேற்கொள்ளப் பட்டன.

இதன் காரணமாக காலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு கடமைக்குச் சென்ற கனக இரத்தினசிங்கம் (37 வயது) என்ற ஊழியர் பலியானுர்.

இணுவில் வாசியான இவர் பஸ் நிலையத்திற்கு சமீபத்தில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த பொழுது ஷெல் தாக்குதலுக்கு இலக்கானுர்.

யாழ். ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட இவர் பின்னர் மரணமானுர்.

**மலாயன் கபே அருகில்**

இதனைத் தொடர்ந்து நகரில் மேற்கொள்ளப் பட்ட ஷெல் காரணமாக மேலும் இருவர் பலியானுர்கள்.

இவர்களில் ஒருவர் முஸ்லிம்.

இவர்கள் இருவரும் மின்சார நிலைய வீதியில் மலாயன் கபே அருகே வந்து கொண்டிருந்த பொழுது ஷெல் தாக்குதலுக்கு இலக்கானுர்கள்.

சீனி முகம்மது அப்துல் அசீஸ் (47 வயது) எஸ். சின்னப்பு (60 வயது) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள்.

**ஏழுபேர் காயம்**

மேலும் ஏழுபேர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டனர்.

நேற்றைய ஷெல் தாக்குதல் காரணமாக ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கே. கே. எஸ். ஆகிய வீதிகளில் பல கடைகள் சேதமடைந்தன.

ஷெல் தாக்குதல்களினுல் எரியும் கடைகளை பாதுகாப்பதற்காக தீயணைக்கும் படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

யாழ் நகரப் பிரதேசத்தில் நடமாடியவர்கள் பயப்பிராந்தியுடன் காணப்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (உ-10)

### பிரபா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞக இருந்துவரும் என நம்பி வாழ்ந்தார்கள். ஆனுல் மத்திய, மாநில அரசுகளின் சமீபத்திய நடவடிக்கைகள் எமது மக்களை பாதுகாப்பற்ற பெரும் ஆபத்தான சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளன.

நாம் எமது மக்களோடும், போராளிகளோடும் தொடர்பு வைத்திருந்த தகவல் தொடர்பு சாதனங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட நடவடிக்கையானது மிகவும் பாரதூரமானது. த. ஈ. வி போராட்டத்திலிருந்து எம்மை முற்ருக அன்னியமாக்கிவிடும் ஆபத்தான நடவடிக்கையாகவே இதைக் கருதுகிருேம்.

தமிழீழ மக்கள் மீது இழைக்கப்படும் அநியாயங்களையும், அட்டூழியங்களையும் உலகத்திற்கு வெளியிடும் ஒரே செய்தித் தொடர்பைத் துண்டித்து விட்டதால், இச் செய்தியானது சிங்கள அரசு தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் இனப்படுகொலையை மூடி மறைக்க துணைபோவதாக அமையும். (அ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 23 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60/N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org